Tamil Short Story - Honourable Mention

கிருத்திகா (Kiruthika)

வேற்றுக் கிரகவாசிகள் (Aliens from different planets)

பரபரப்பான திங்கள் காலை. பளிச்சென்று ஒரு மேசை. அதன் மறுபக்கத்தில் எலும்பியல் மருத்துவர். பல இனத்தைச் சேர்ந்த நோயாளிகளை எதிர்கொண்டு தமிழ், சீனம், மலாய், ஆங்கிலம் என மாறிமாறி பேசிக்கொண்டிருக்கிறாள் நதியா. இரவு பகல் பாராமல் சாங்கிக்கு வந்துபோகும் விமானங்களைப் போலவே, எப்பொழுதும் கம்பீரமான சிரிப்புடன் வளைய வரும் அவள், தன்னுடைய இயல்பான முகபாவத்துக்கு வரும்பொழுது நேரம் பகல் மணி ஒன்று. உணவு இடைவேளை.

ஒரு சிறு கைப்பையுடன் உணவகத்தை நோக்கிச் சென்ற அவளை ஆவலுடன் எதிர்கொண்டனர் அதிராவும் ஆதியும். தொழில்நுட்பப் பிரிவில் வேலை பார்க்கும் அவர்களுடன் மதிய உணவைச் சாப்பிட்டுக்கொண்டே இலக்கியம் பேசுவது நதியாவின் அன்றாட வழக்கம்.

"இன்னைக்கு நான் சைவம் சாப்பிடப்போறேன்." என்ற அதிரா சீன சைவ உணவுக்கடையை நோக்கிச் சென்றாள்.

"இன்னைக்கு ஜப்பானிய உணவைச் சாப்பிடணும்னு தோணுது" என்று கூறிய நதியாவின் கண்கள் 'சகாயே சுஷி' கடையைத் தேடிப்போனது.

"உனக்கு என்ன வேணும்?" என்று ஆதியைக் கேட்ட நதியா, அவன் யோசிக்க ஆரம்பிப்பதற்குள், "பொறு. நானே வாங்கிட்டு வரேன்" என்று கூறிச் சென்றாள். ஆதிக்கு நிம்மதியாக இருந்தது. தனக்கென ஒரு தனி இரசனையைக் கொண்டவனில்லை ஆதி. எல்லாவற்றையும் ஒன்று போலவே ஏற்றுக்கொள்ளும் மனோபாவம் கொண்டவன் அவன். அதிராவின் மீது அவனுக்கு ஏற்பட்ட காதல், அவனே புரிந்துகொள்ள முடியாத அதிசயம்.

"அவன் எங்கே என்கிட்ட அவனோட காதலைச் சொன்னான்? நானே அவனோட காதலைக் கண்டுபிடிச்சு, அது உண்மையான்னு அவனிடம் கேட்க வேண்டியதாச்சு" என்று அடிக்கடி சொல்லி அவனைச் சீண்டுவது அதிராவின் பொழுதுபோக்குகளில் ஒன்று.

அப்படிப்பட்ட ஆதி, பாரதியைப் பற்றியும், தமிழ் காப்பியங்களைப் பற்றியும் பேச ஆரம்பித்துவிட்டால், வாயிலிருந்து நீரைக் கொட்டிக்கொண்டே இருக்கும் இன்னொரு 'மெர்லயன்'தான். கடகடவென்று சொற்களைக் கொட்டிக்கொண்டே இருப்பான்.

ஆவி பறக்கும் கிண்ணங்களை தட்டுகளில் ஏந்தி தோழிகள் உணவு மேசைக்கு வரவும், ஆதி பழச்சாறுகளை எல்லோருக்கும் வாங்கிக்கொண்டு மேசைக்கு வரவும், கலகலப்புடன் உரையாடத் தொடங்கினர் நண்பர்கள்.

"போன ஜூன் மாசத்தில் 'பொன்னியின் செல்வன்' நாடகத்தை சென்னையில பார்த்தேன். சோழர் காலத்து நடை, உடை பாவனைகளும் இனிமையான தமிழும் என்னை அந்தக் காலத்துக்கே கூட்டிச்சென்றது. ஹூம்" என்றான் கற்பனையில் மிதந்தபடியே ஆதி.

"உனக்கு ஏன் திடீர்னு அது ஞாபகத்துக்கு வருது? என்றாள் நதியா.

"இந்த ஆண்டு அந்த நாடகம் மீண்டும் மேடை ஏறுது. சிங்கப்பூரில் ஒரு நாடகம் போட்டால், இன்னொரு முறை பார்க்கலாம். நீங்களும் கூட பார்க்க சந்தர்ப்பம் கிடைக்கும்"

”உனக்கு ஏன்தான் இப்படி புராண நாடகங்கள், எழுத்துகளில் ஆர்வமோ? இப்ப கூட என்ன? சென்னைக்குப் போய்ப் பாரேன்”

”அது சரி! அப்போ அலுவல் வேலையாப் போனேன். இதுக்குன்னு தனியா கிளம்பிப் போக முடியுமா, என்ன?”

”செலவு மட்டுமா? இப்பல்லாம் நமக்கு நேரமும்தானே பிரச்சினை? விருப்பத்துக்கு ஏத்த மாதிரி விடுப்பு எடுக்கமுடியாது. சில சமயம் வேலைக்காக வாழறமா, வாழறதுக்காக வேலை செய்றோமான்னு சந்தேகம் தோணுது”

இப்படி அவர்களுடைய உரையாடல் சூடுபிடிக்க, கிண்ணங்களில் உணவும் வயிற்றைப் பதம் பார்த்துக் கொண்டிருந்தது. செவிக்கும் உணவு. வயிறும் நிறைந்தது. வெயிலும் சுட்டெரித்தது.

”நதியா, நீ ஏன் கணவனுடன் சேர்ந்து வாழக்கூடாது?” என்று ஆதி திடீரெனக் கேட்கவும், அதிரா அதிர்ந்தாள். நதியாவின் கண்களில் கண நேரம் ஒரு வலி தோன்றி மறைந்தது. அந்நியர்கள் மூவர் அமர்ந்திருப்பது போன்ற ஒரு விநோத அமைதி ஏற்பட்டது.

மணி 1:50 என்பதை அதிரா சுட்டிக்காட்ட, சட்டென நண்பர்கள் விடைபெற்றுக் கொண்டு தத்தம் வேலையிடத்தை நோக்கிச் சென்றனர்.

***************************

வானில் இருண்ட மேகங்கள் வேகவேகமாக பின்னோக்கி நகர்வதைப் போல நதியாவின் நினைவுகளும் பின்னோக்கி வேகமாக ஓடின. அவளுடைய திருமண வாழ்க்கையை புரட்டிப்போட்ட ஒரு சனிக்கிழமை மாலை 5 மணி.

கால இயந்திரத்தில் நான்கு வருடங்களுக்கு முன்னர் சென்று, அன்று நடந்தவற்றை மட்டும் மாற்ற முடிந்தால்…

நண்பர்களுக்கு விருந்து. அழகான பூ அலங்காரம். வட்டமாக அமர்ந்து அளவளாவ திண்டுகள் சூழ்ந்த மெத்தைகள். அலங்கரிக்கப்பட்ட உணவு வகைகள். வாசனை மெழுகுவர்த்திகள். 2 மாத திட்டமிடல். நதியாவின் கைவண்ணத்தில் ஒரு தேவலோகம் போலக் காட்சியளித்தது அவளுடைய இல்லம்.

”வனிதா, வா! வா! கண்ணன் வாங்க!” என்று மகிழ்ச்சியில் துள்ளிய நதியா பள்ளித்தோழி வனிதாவை கட்டி அணைத்துக் கொண்டாள்.

”எங்கம்மா உன்னோட கணவன்? பார்த்து ரொம்ப நாளாச்சு?” என்ற கண்ணனிடம்,

”ஏதோ திடீர் வேலன்னு 3 மணிக்கு போனார். வர நேரம்தான்”

அதிராவும் ஆதியும் அடுத்து வந்தனர். அப்போது அவர்கள் காதலர்கள் மட்டுமே.

”நதி, கொஞ்சம் நேரமாயிடுச்சு. வந்துட்டேன்…” என்ற அறிவிப்புடன் வந்த அதிரா பரபரவென்று வருகிற விருந்தினர்களுக்கு பழச்சாறு எடுத்து விநியோகிக்க ஆரம்பித்தாள்.

கிருத்திகா (Kiruthika)

வேற்றுக் கிரகவாசிகள் (Aliens from different planets)

அழைத்திருந்த அனைவரும் வந்துவிட்டனர். கிட்டத்தட்ட 25 பேர் கலகலவென்று சிரித்துப் பேசிக்கொண்டிருக்க, அந்த இடம் களிப்பின் எல்லையோ என்று மயக்கும் வகையில் காட்சியளித்தது.

"நதி, உன் கணவன் வேலையில் மறந்துடப் போறார். கூப்பிட்டுப் பாரேன். எல்லோரும் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருக்கும் போது அவர் மட்டும் பாவம், இல்லைன்னு பார்க்கிறேன்."

"இல்லை, வனிதா. அவனுக்கு இன்னமும் பொறுப்பே இல்லை. எவ்வளவு தூரம் திட்டமிட்டு அவனுக்கும் ஓய்வாக இருக்கும் இந்த நாளை தேர்ந்தெடுத்தேன். திடீர்னு வேலை வந்தவுடன் எல்லாத்தையும் விட்டுட்டுப் போய்ட்டான்."

"நதி, நீ குழப்பிக்காத. எப்போ வேணா வந்திரலாம். பார்ப்போம்"

"ஏதாவது திட்டம் அவசரமாத் தேவைன்னு வரைய ஆரம்பிச்சுட்டா, நேரங்காலம் போறதே தெரியாது. அவனோட ஆர்வத்தைத் தடை செய்யவே முடியாதே! எல்லாத்தையும் மறந்துடுவான். அதான் பயமாயிருக்கு. அவன் வரலைன்னா, வந்திருக்கிற நண்பர்கள் அனைவரும் ஏமாந்துடுவாங்களே" என்று ஆதங்கப்பட்டாள் நதியா.

தொடர்ந்து,

"வனிதா. ஏற்கனவே நேரமாகிவிட்டது. சரி. வா! பேசாமல் நாம முதல்ல சாப்பிட ஆரம்பிக்கலாம்" என்று அவள் சொல்லிக்கொண்டிருக்கும் போதே,

"ஹாய், ஃப்ரெண்ட்ஸ்!" என்று சிரித்துக்கொண்டே நுழைந்தான்.

"வாங்க! வாங்க! எல்லோரையும் பார்க்க எவ்வளவு உற்சாகமா இருக்கு" என்றவன் குரல் அந்த அறையில் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருந்தது. அந்தக் குரலுக்கு ஒரு காந்த சக்தி. அதைக் கேட்டுக்கொண்டிருந்த விருந்தினர்களின் முகங்கள் மலர்ந்தன.

நதியாவிற்கு நிம்மதி ஏற்பட்டது. இருந்தாலும், அவனைக் காணாமல் அவளுக்கு ஏற்பட்ட ஒரு படபடப்பு இருந்துகொண்டே இருந்தது. அவனைப் பற்றிய புரிதல் இருந்தாலும், விருந்தினர்களுக்கு சங்கடம் ஏற்படாதவாறு அவன் வந்துவிட்டாலும், இரவு எரிமலை ஒன்று குமுறத்தான் செய்தது.

"உன்னக் கேட்டுத்தானே எல்லாரையும் கூப்பிட்டேன். அவங்க வரும்போது நீ இல்லேன்னா, எப்படி?" என்று வெடித்தாள் அவள்.

"நானும் காலைல இருந்து எங்கேயும் போகாமத்தானே இருந்தேன். திடீர் வேலை. தவிர்க்கமுடியலை நதி" என்று சொல்லிப் பார்த்தான் அவன்.

"இது முதல் தடவை இல்ல. நாம புது வீடு வந்து எவ்வளவு நாளாச்சு. நேரமே கிடைக்கல. ஒருவழியா, நம்மோட அன்பை நண்பர்களோட பகிர்ந்துக்க திட்டமிட்ட விருந்து இது. நண்பர்களை எல்லாம் எவ்ளோ நாளுக்கு அப்புறம் சந்திக்கிறோம். அவங்க வரும்போது நீ வீட்டுல இல்லேன்னா எனக்கு சங்கடமா இருந்தது."

"புரியுது டா. உடனே வந்திரலாம்னுதான் போனேன். நேரமாயிட்டுது."

முடிந்த ஒரு நிகழ்வு, அவர்களுடைய எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக்கியது.

Tamil Short Story - Honourable Mention

கிருத்திகா (Kiruthika)

வேற்றுக் கிரகவாசிகள் (Aliens from different planets)

காதல் பறவைகளை திருமண பந்தம் நெருக்கியது. பிணைப்பை விடுத்து பறக்கத் துடித்தன அந்த ஜோடி.

****************************

நினைவுகளின் சுமையுடன் அலுவல் மேசையில் வந்து அமர்ந்த நதியாவின் முகத்தில் சிரிப்பு செயற்கையாக வந்து ஒட்டிக்கொண்டது.

நோயாளிகளைக் கவனித்து, மருத்துவ பரிந்துரைகள் கொடுத்து ஆறுதல் சொல்லி அனுப்பிய நதியா தன்னை மறந்து வேலையில் ஆழ்ந்து போனாள்.

3:00 மணியளவில் நதியாவைப் பார்க்க வந்த ஒரு சிறுவனின் பின்பக்க விலா எலும்புகள் முறிந்திருந்தன.

"என்ன அருண், எப்படி உனக்கு அடிபட்டது?"

"…"

"பள்ளியில் காற்பந்து விளையாடுவாயா? யாராவது தட்டிவிட்டார்களா?"

இல்லையென்று தலையாட்டினான் சிறுவன். அவனுடைய கண்களில் கண்ணீர் திரண்டது. அவனால் இருக்கையில் உட்காரக்கூட முடியவில்லை.

அவனுடைய ஊடுகதிர் படத்தைப் பரிசோதித்த நதியா, அவனுடைய எலும்பு முறிவு இயற்கையாக ஏற்பட்டதல்ல என்பதை அறிந்துகொண்டாள். அவனுடன் வந்திருந்த பெண் அசட்டையாக, கைபேசியில் பேசிக்கொண்டிருந்தாள்.

"என்ன நடந்தது?" என்று சிறுவனிடம் மீண்டும் கேட்டபொழுது, அதைக் கவனித்த அந்தப் பெண், சட்டென்று கைபேசியை அணைத்துவிட்டு, "வைத்தியம் பார்ப்பதுதான உங்க வேலை. அதைச் செய்யுங்க. எதுக்கு ஆராய்ச்சி எல்லாம்?" என்று பாய்ந்தாள்.

"இந்த எலும்பு முறிவுக்கு உடனே நல்ல ஓய்வு தேவை. படுக்கையில் சேர்த்துடுங்க. வலிக்கு மருந்து கொடுக்கறேன். முதல்ல தூங்கட்டும். சில பரிசோதனைகளையும் செஞ்சிரலாம்" என்று கூறிய நதியா அந்தப் பெண்ணின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல், செவிலியரிடம் சில ஆணைகளைப் பிறப்பித்து அவர்களை வெளியேற்றினாள்.

அவர்கள் சென்றதும், காவல்துறைக்கும், சமுதாய குடும்ப மேம்பாட்டு அமைச்சுக்கும் தொலைபேசியில் அழைப்புகள் விடுத்தாள். அவளைப் பார்க்கக் காத்திருக்கும் மற்ற நோயாளிகளை வேறு மருத்துவரிடம் அனுப்பிவிட்டு, மேலதிகாரியைப் பார்க்கச் சென்றாள்.

"விவரமாகச் சொல்" என்ற மேலதிகாரியிடம், "அந்தச் சிறுவனை யாரோ கொடூரமாக அடித்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது." என்று கூறி, அச்சிறுவனின் ஊடுகதிர் படத்தை அவருக்குக் காண்பித்தாள்.

அதற்குள் அவர்களைத் தேடி காவல்துறையினர் வந்து விசாரிக்கத் தொடங்கினர்.

”கீழே விழுவதாலோ, விளையாட்டிலோ ஏற்படும் முறிவு அல்ல இது. பின்பக்க விலா எலும்பில் அடிபட்டிருக்கிறது. முறிவும் ஏற்பட்டிருக்கிறது” என்ற நதியா மேலும் தொடர்ந்தாள்.

”எப்படி அடிபட்டதுன்னு சொல்ல மறுக்கிறான். அவனுடைய முகத்தில் பயம். கூட வந்த பெண்ணும் அவன் மேல கரிசனம் இல்லாமத்தான் இருக்கிறா. அதனாலதான் உங்களை அழைத்தேன்” என்று படபடத்த நதியாவின் உள்ளம் எரிமலையைப் போலக் கொந்தளித்தது.

சிறுவனுக்கு சிகிச்சையைப் பரிந்துரைத்து அவளால், அவனை வீட்டிற்கு அனுப்பியிருக்க முடியும். அவனுடைய பாதுகாப்பை ஒட்டி அவள் எடுத்துள்ள அந்த நடவடிக்கையை ஆதரித்தார் அவளுடைய மேலதிகாரி. உடனே காவல்துறையினரை அழைத்துக்கொண்டு அந்தச் சிறுவன் அனுமதிக்கப்பட்டிருக்கும் படுக்கைத் தொகுதிக்குச் சென்றார்.

சிறிது நேரத்தில் சமுதாய குடும்ப மேம்பாட்டு அமைச்சிலிருந்து திருமதி வசந்தி என்ற அலுவலர் வந்தார். நதியா அவருக்கு விளக்கங்கள் கொடுத்து, அவரையும் சிறுவனின் படுக்கைக்கு அழைத்துச் சென்றாள். அப்பொழுது காவல்துறையினர் அந்தப் பெண்ணிடம் தனி அறையில் விசாரணை நடத்திக்கொண்டிருந்தனர்.

வசந்தி சிறுவனிடம் அன்பாகப் பேசினார். பொதுவாக அவனுடைய பள்ளியைப் பற்றியும் நண்பர்களைப் பற்றியும் பேசினார். அந்தப் பெண் அவனுடைய தாய் என்றும், அவனுடைய தந்தை அவர்களுடன் இல்லை என்றும் அவன் கூறினான்.

அவர்களுடைய வீட்டில் அந்தப் பெண்ணின் காதலன் வசித்துவருகிறான் என்றும் அவர்களுக்குத் தெரிய வந்தது.

ஆதியின் மதிய நேரக் கேள்வியால் மட்டுமல்ல, அருணின் நிலையும் அன்று நதியாவை சுனாமியென உலுக்கியது. தன் முடிவு சரி என்றும் இல்லை என்றும் சிந்தனைகள் அவளை அலைக்கழித்தன. உடனடியாக இரயிலில் ஏறாமல், வீடுவரை நடந்தே சென்றாள். இரண்டு கிலோமீட்டர்கள்.

குழந்தைகள் என்றால் நதியாவிற்கு கொள்ளை ஆசை. அதனாலேயே குழந்தைகள் எலும்பியல் மருத்துவராக விருப்பம் கொண்டு நிறைவேற்றினாள். திருமணம் ஆனவுடன் தனக்கென்று ஒரு குழந்தை உடனே வேண்டுமென்று யோசிக்கவில்லை. நாளாக நாளாக குழந்தை ஆசை மனத்தின் அடியிலிருந்து அவ்வப்பொழுது தலைதூக்குவதை அவளால் தடுக்க முடியவில்லை.

எத்தனையோ குழந்தைகள் வாழ வசதியின்றி இருக்கையில், தன்னால் ஒரு குழந்தைக்கு நல்ல உணவு, உடை, கல்வி என்று எல்லாவற்றையும் கொடுக்கும் வசதியும் மனமும் இருந்தும், அவளுடைய சூழ்நிலை அவளை மிகவும் யோசிக்க வைக்கிறது.

வீட்டிற்குள் நுழைந்தவுடன் குளித்தாள். எதுவும் சாப்பிடவில்லை. பால்கனியில் அமர்ந்து நீச்சல் குளத்தில் விளையாடும் சிறுவர்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள். எல்லோரும் தத்தம் வீடு திரும்ப, நிசப்தம் அவளுடைய சிந்தனைகளைத் தீவிரமாக்கியது. வெட்கத்துடன் உலகை எட்டிப் பார்த்த பிறைநிலா உயரே உயர்ந்து உயர்ந்து தலைக்கு மேலே கம்பீரமாக ஒளிர்ந்தது.

Tamil Short Story - Honourable Mention

கிருத்திகா (Kiruthika)

வேற்றுக் கிரகவாசிகள் (Aliens from different planets)

****************************

சாங்கி விமான நிலையம். காத்திருப்பு அறை. சிறப்பு விளக்குகள் இல்லாமல், அந்த அறை கிறிஸ்துமஸ் கால 'ஆர்ச்சர்ட் சாலை' போல ஜகஜ்ஜோதியாக ஜொலித்தது. காரணம் புதிதாகக் கல்யாணமான நதியாவின் கன்னத்து பூரிப்பு.

அந்த ஜோடி இடித்துக்கொண்டு அமர்ந்திருந்தனர். செல்ஃபி எடுத்து '@சாங்கி' என்று முகநூலில் பதிவேற்றிக்கொண்டு இருந்தான் அவன். கணவனுடைய தோளில் சாய்ந்து, அவன் கையில் உள்ள கைபேசியில் நடக்கும் செயல்களைப் பார்த்துக்கொண்டிருந்தாள் நதியா.

சன்னமான கொஞ்சல்கள் இன்னிசை மீட்டின.

"இன்னும் கொஞ்சம் சாப்பிடு" என்று நதியா அவனுக்கு உணவு பரிமாறினாள்.

அவளுடைய கோப்பையில் தேநீரை ஊற்றிக்கொண்டிருந்த அவன், "ஏய், போதும். போதும்" என்று அவசரமாகத் தடுக்க அவனுக்கு புரையேறியது.

தண்ணீரை எடுத்து அவனுக்கு நீட்ட, அதை வாங்கிக் குடித்தவன் கண்களில் நீர் கோர்த்தது. "நானே பக்கத்தில இருக்கேன். வேற யார் உன்னை நினைக்கிறாங்க?" என்று பொய்க்கோபத்துடன் கேட்டாள் நதியா.

சிரித்துக்கொண்டே அவள் தலையில் தட்டினான் அவன்.

"விமானம் ஏறுவதற்கு முன், எனக்கு கைப்பையும் உதட்டுச்சாயமும் வாங்கனும்."

"ஏய், இப்போதானே கல்யாணத்துக்காக நிறைய வாங்கியிருப்பாய்."

"விமான நிலையத்தில் நான் தேடும் ஒரு நிறம் இருக்குமென்று நம்புகிறேன். போலாமே!"

"சரி. கலக்கிடுவோம். சாப்பிடு முதல்ல. போகலாம்."

முன்னறிவிப்பு இல்லாமல் ஒரு விசயத்தைச் சொன்னாலும் கூட அவனால் எப்படி உடனே ஒப்புக்கொள்ள முடிகிறது என்று நதியா வியந்தாள்.

சில ஆண்டு காதலும் ஒருவர் மேல் ஒருவர் வைத்திருக்கும் இயல்பான அன்பும் அவர்களுடைய நெருக்கத்தில் தெரிந்தது.

அன்று தேனிலவிற்கு சென்றவர்கள் ஒரே வாரத்தில் சிங்கப்பூருக்குத் திரும்பினர். ஒரு தனியார் குடியிருப்பு வீட்டில் வாடகைக்கு குடிபுகுந்தனர். அவர்களுடைய விடுப்புகளும் முடிந்தன. இருவரும் வேலைக்குச் செல்ல ஆரம்பித்தனர்.

இரண்டு மாதங்கள் மின்னல் வேகத்தில் ஓடி மறைந்தன. அழகாகப் பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்து வீட்டை அலங்கரித்து, நிர்வகித்தாள் நதியா.

காதல் கணவனுக்கு திருமணத்திற்குப் பின்னர் வந்த முதல் பிறந்தநாளுக்கு நதியா இத்தாலியில் இருந்து வரவழைத்த தானியங்கி ஹெலிகாப்டர் செய்யும் உபகரணப் பெட்டி ஒன்றைப் பரிசளித்தாள்.

"வாவ்! இவ்வளவு சிறப்பம்சம் வாய்ந்த உபகரணப் பெட்டியை எப்படிக் கண்டுபிடித்தாய்? உன்னுடைய திட்டமிடலுக்கு ஓர் அளவே இல்லை" என்று அவன் அவளைப் புகழ்ந்து தள்ளிவிட்டான்.

மறுநாள் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பியவளை விதவிதமான கிறுக்கல்களைத் தாங்கிய வரவேற்பறை சுவர் வரவேற்றது. அவள் ஆசை ஆசையாக வாங்கிக் கொடுத்த அன்பளிப்பின் உபகரணங்கள் தரை எங்கும் சிதறிக் கிடந்தன.

தனி அறைக்குச் செல்லாமல் வரவேற்பறையிலேயே அமர்ந்து அவன் ஹெலிகாப்டர் செய்ய முயற்சித்திருப்பதும், அதற்கு உபயோகப்படுத்திய எண்ணெய்ப் பசை தெறித்து, புதிப்பிக்கப்பட்ட சுவரில் கோலமிட்டிருப்பதும் அவளுடைய வயிற்றில் புளியைக் கரைத்தது.

மாலையில் வீடு திரும்பியவுடன், இடத்தைச் சுத்தம் செய்து எல்லாவற்றையும் பழைய மாதிரியே அவன் சீரமைத்துவிட்டாலும், திருமண வாழ்விற்கும் காதல் வாழ்க்கைக்கும் வேறுபாடுகள் உண்டு என்று நதியாவிற்குத் தோன்றியது.

அது ஒரு முடிவா அல்லது ஆரம்பமா என்ற பயம் தோன்றாமல் இல்லை.

தான்தோன்றித்தனமாக வாழ்பவனுடன் ஒரே வீட்டில் வாழும் சிரமத்தை உணர ஆரம்பித்தாள். தலையைச் சிலுப்பி அந்த எண்ணத்தை உதற முற்பட்டாள் நதியா.

****************************

மறுநாள் அருணின் வீட்டிற்குச் சென்று விசாரித்த காவல்துறையினர், ஒழுங்கின்மையுடன் இருந்த அச்சிறுவனின் அறையைப் பற்றிக் குறிப்பு எடுத்துக் கொண்டனர்.

”அருணுக்கு எப்படி அடிபட்டுச்சு? கடைசி முறையா கேக்கறேன். உண்மையைச் சொல்லலேன்னா, கைது செய்ய வேண்டி வரும்” என்று சொன்ன பிறகே அந்தப் பெண் பயத்தில் உளர ஆரம்பித்தாள்.

”என் காதலன் சாப்பாடு வாங்கிட்டு வீட்டுக்கு வந்தான். குடித்திருந்தான். சாப்பிடலாம்னு பிள்ளையைக் கூப்பிட்டோம். அவனைக் கண்டாலே எம்பிள்ளைக்கு பிடிக்கலை. ஒரேடியா வாக்குவாதம் செஞ்சு சாப்பிட மறுத்தான். அவனுக்கு கோபம் வந்து, துணி காயப்போட உதவிக்கு வச்சிருந்த கம்பை எடுத்து பிள்ளையை அடிச்சிட்டான்.”

தன்னிலையைச் சரியாக வளர்த்துக்கொள்ளாத இவளுக்குப் பிள்ளையாகப் பிறந்தது அந்தச் சிறுவனின் பிசகா?

இரவு எசகுபிசகாக அடிவாங்கிய சிறுவன் வலியில் துடிப்பதை இருவரும் காலைவரை கண்டுகொள்ளாமல் இருந்திருக்கிறார்கள். வழக்கை எழுதிக்கொண்டு தகுந்த நடவடிக்கை எடுக்க காவல்துறையினர் முனைந்தனர்.

அன்று காலையில் நதியாவைச் சந்திக்க அலுவலர் வசந்தி ஒரு தம்பதியை அழைத்து வந்தாள்.

”நதியா, சரியான சமயத்தில நீங்க எங்களுக்குத் தகவல் தெரிவிச்சீங்க. அவனோட மன உளைச்சல் ரொம்ப நாளா வெளிய தெரியாம இருந்திருக்கு. எலும்பு முறிவு ஏற்பட்டதால நீங்க அருணுக்கு ஏதோ பிரச்சினைன்னு கண்டுபிடிச்சீங்க. அவனோட வீட்டுலயே அவனுக்கு பாதுகாப்பு இல்லை. அருண் குணமடைந்தவுடன், இவங்க வீட்டுக்கு அவனைக் கூட்டிட்டுப் போவாங்க.”

"அவங்க குடும்பம் நல்லபடியா அவனைப் பார்த்துக்க தயாரானப்புறம், அவன் அங்க திரும்பிப் போயிடுவான். அதுவரைக்கும் எங்க வீட்டிலே பத்திரமா பாத்துக்குவோம். எங்களுக்கு சிரமமில்லை." என்ற அந்த தம்பதியின் உத்தரவாதம் நதியாவிற்கு நிம்மதியைத் தந்தது.

அன்றைய உணவு இடைவேளையில் நண்பர்களுக்கிடையே இந்த நிகழ்ச்சி பல கருத்து பரிமாற்றங்களுக்கு வழி வகுத்தது. 'மீ கொரங்க்', பழங்கள், இந்தியச் சாப்பாடு என அன்றைய உணவை முடித்துக்கொண்ட அவர்களுடைய உணவு வேளையில் இருண்ட வானம் அவர்களுக்குத் துணை நின்றது.

ஆதியின் முந்தைய நாள் கேள்வியும் அங்கேயே காற்றில் தொக்கி நின்றது. காலம் ஆனாலும், காயங்கள் ஆறுமோ? புது வாழ்க்கை வெற்றி தருமா?

மாலையில் வேலை முடிந்து மருத்துவமனையை விட்டு நதியா வெளியேறும் போது, கைபேசி கிணுகிணுத்தது.

"ஹனி! எப்போ வருவாய்? நான் காத்திட்டிருக்கேன். வேலை முடிஞ்சப்புறம் சொல்லு"

அவனுடைய குரலைக் கேட்டதும் நதியாவின் முகம் மேலும் மலர்ந்து பிரகாசித்தது.

"இங்கே என்ன பண்ற? எனக்கு வேலை முடிஞ்சுட்டு. வந்துட்டே இருக்கேன்"

"அருமை! வா. வா"

சிவப்பு நிற வால்வோ S60 மகிழுந்துவில் தன்னை நுழைத்துக்கொண்ட நதியாவின் கையைப் பிடித்துக் குலுக்கினான் நரேன்.

எதிர்பாராத இந்த பிடியால் தடுமாறினாள் நதியா. அவன் ஏதோ கொண்டாட்டத்தில் இருக்கிறான் என்று அவனுடைய வருகையும் செய்கையும் மௌன மொழி பேசின.

"ஏய், விடு. எத்தனை முறை சொல்றேன். மருத்துவமனையில் இருந்து வந்தா, நான் குளிக்கிற வரை யாரையும் தொடமாட்டேன்னு"

"சட்டமெல்லாம் உனக்கு. எனக்கில்ல"

காலில் தட்டுப்பட்ட பொருளை எடுத்தாள் நதியா. குளிர்கண்ணாடி.

"இது இருக்கிற இடமா இது?"

"இல்லையே! அது எப்படி அங்கே போச்சு?

"இந்த நக்கலுக்கு ஒன்னும் குறைச்சல் இல்லை."

"நான் எங்க வச்சாலும், நீதான் அழகா கண்டுபிடிச்சு கொடுக்கிறயே! அப்புறம் எனக்கென்ன கவலை"

அவர்கள் வசிக்கும் 'டி நெஸ்ட்' தனியார் குடியிருப்பு பகுதிக்குள் வாகனம் நுழைந்தது.

அன்று மிக நல்ல மனநிலையில் இருந்தான் நரேன். நதியா குளித்துத் தயாராகி வரும்வரை மடிக்கணினியைத் தட்டி கொண்டிருந்தவன், தேநீருடன் அவள் வரவும், மடிக்கணினியை மடித்துவைத்துவிட்டு அவளிடமிருந்து தேநீரை கையில் வாங்கிக்கொண்டான்.

கிருத்திகா (Kiruthika)

வேற்றுக் கிரகவாசிகள் (Aliens from different planets)

"லா சேல் கல்லூரியில் இன்னைக்கு நடந்த கண்காட்சி பிரமாதம். 'ராஃபிள்ஸ் பிளேஸ்' சுற்றுவட்டாரத்தில் என்ன மாதிரி மாத்தலாம்னு ஒரு போட்டி அறிவிச்சிருந்தாங்க, இல்ல. எவ்வளவு படைப்புகள் வந்திருந்தன, தெரியுமா?"

"அருமை! உன்னோட படைப்புக்கு வரவேற்பு எப்படி இருந்தது?"

"ஐயா துள்ளிக்கிட்டு இருக்கேனே, புரியலையா? கடைசிச் சுற்றுக்கு என்னோட வடிவமைப்பும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கு."

"வாவ்! அடுத்த கட்டத்திற்கு போனால், நல்லாருக்கும். உன்னோட இத்தனை நாள் கனவும் உழைப்பும் நிச்சயமாக பலன் கொடுக்கும்."

"இந்த திட்டத்துக்கு மட்டும் பரிசு கிடைச்சா, நல்ல அங்கீகாரம் கிடைக்கும். ஓர் அற்புதமான வாய்ப்பு."

இருவரும் சிலாகித்து பேசிக்கொண்டிருந்தனர். நதியாவும் அந்தச் சிறுவனுக்கு தற்காலிகமாக கிடைத்திருக்கும் அடைக்கலம் பற்றிச் சொன்னாள்.

இரவு உணவை முடித்துக்கொண்டு அவளிடமிருந்து விடைபெற்றான் நரேன்.

"ரொம்ப நேரம் முழிச்சிருக்காதே. உடம்பு அலுப்படையும்போது, உடனே தூங்கப்போ." என்று அக்கறையுடன் சொன்னவளை கனிவுடன் நோக்கிக் கையசைத்துவிட்டு, எதிரில் இருந்த வீட்டின் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான் அவன்.

'என்ன உறவு இது?' என்று இரகசியமாக அவர்களைக் கண்காணித்துக் கொண்டிருந்த நிலா, அவள் பார்த்துவிடுவாளோ என்று அஞ்சி சட்டென தன்னை மேகங்களுக்கு நடுவில் மறைத்துக்கொண்டது.

புன்முறுவலுடன் கதவைத் தாளிட்டுச் சென்ற நதியாவும் ஒரு புத்தகத்துடன் படுக்கையில் விழுந்தாள். அரை மணி நேரத்திற்குள் உறக்கம் அவள் கண்களைச் சுழற்ற படுக்கையின் அருகில் இருந்த விளக்கை அணைத்தாள். இருட்டிலேயே எட்டி அருகில் இருந்த மேசையில் புத்தகத்தை வைத்துவிட்டு, தண்ணீர் எடுத்துக் குடித்தாள். சிந்தாமல் சிதறாமல் தண்ணீர் புட்டியை அதனிடத்தில் வைத்தாள். அடுத்த நொடி கும்மிருட்டில் கண்ணயர்ந்தாள்.

****************************

ஜெயகாந்தனும் ஜெயந்திசங்கரும் புத்தகங்களின் மூலம் நதியாவுடன் உரையாடுவார்கள். பேசினால்தான் உரையாடலா? செயலற்ற ஒரு எண்ணப் பரிமாற்றத்திற்கு என்ன பெயரோ? சுவாசிக்க யோசிக்க ஒரே சிந்தனை. தன் இரசனைக்கேற்ற எண்ணங்களை எழுத்தாளர் அள்ளித் தெளிக்க, புத்தகத்துடன் ஒன்றிப்போவாள் நதியா. உறங்கும் முன் இப்படி ஒரு வழக்கம் நதியாவுக்கு.

எல்லாவற்றையும் திட்டமிட்டு செய்யும் வழக்கம் நதியாவிற்கு. நினைத்தபடி செய்து, குதூகலமாக வாழும் கணவனிடம் அவளால் ஈடு கொடுக்க முடியவில்லை. காதலும் 'நான்' என்ற அகங்காரமும் இரு பாலருக்கும் பொருந்தும் அன்றோ!

கிருத்திகா (Kiruthika)

வேற்றுக் கிரகவாசிகள் (Aliens from different planets)

"ஏய், நதி! வாயேன். தூங்கறதுக்கு முன்னாடி கொஞ்சம் கிழக்குக் கடற்கரைக்குப் போய்ட்டு வருவோம்." என்றான் கணவன்.

"இந்த நேரத்தில என்னத்துக்கு? சாயந்திரமே சொல்லியிருக்கலாம் இல்ல. சாப்பிட்டாச்சு. தூங்கற நேரமாயிடுச்சு."

"இப்பத்தான் தோணுது. திடீர்னு உன்மேல ஒரே ஆசையா இருக்கு. சும்மா கொஞ்ச தூரம் கடற்கரையில நடந்திட்டு வரலாம்."

"என்னப்பா நீ! மணி என்னாகுது? சீக்கிரம் தூங்கனுமே. காலைல ஒரு அறுவை சிகிச்சை இருக்கு. சனிக்கிழமை போலாமே"

அவன் கையில் பிடித்திருந்த கண்ணாடிக் குவளையில் பழச்சாறு. அது பறந்த நொடியில் இதமான வயலெட் நிறச் சுவரில் பழச்சாறு ஒரு நவீன ஓவியம் தீட்டியது.

அதிர்ந்தாள் மனைவி. கோபத்தினாலும் ஏமாற்றத்தினாலும் வலிப்புடன் தரையில் விழுந்தான் துணைவன்.

****************************

கடந்த காலத்தை விடுத்து, ஒரு புதிய அத்தியாயத்தில் வாழ்ந்து வருகிறாள் நதியா.

மறுநாள் வழக்கம்போல மதிய உணவு வேளையில், அதிராவும் ஆதியும் காத்திருந்தனர். நான்கு வாரங்கள் தொடர்ந்து மலர்ந்திருந்து வாடிப் போகும் ஆர்கிட் மலரைப் போல அவர்களுடைய முகங்களும் வாடியிருந்தன.

அவள் வந்தவுடன் அவர்களும் எழுந்துகொள்ள மூவரும் உணவு வாங்கிக்கொண்டு வட்ட மேசையில் வந்து அமர்ந்தனர்.

"சாபாவில் ஏற்பட்டுள்ள நிலநடுக்கம் பாத்தியா? அந்த இரண்டு சிகரங்களும் சரிஞ்சிருச்சு. தெரியுமா?"

"ஆமா அதிரா. சாதனை செய்ய மலையேறப் போனவங்களுக்கு வந்த சோதனையைப் பார். இவ்வுலக வாழ்வின் நிலையற்ற தன்மையை தானே இயற்கை அடிக்கடி நமக்கு சுட்டிக்காட்டுது."

"உன்னைப் போன்ற மருத்துவர்கள் உயிர்களைக் காப்பாற்ற எவ்வளவு பிரயத்தனப் படுறீங்க. இயற்கையின் சீரழிவில் பாதிக்கப்படுபவர்களுக்கு எந்த உதவிக்கும் வாய்ப்பே இல்லாமல் போயிடுதே?"

"நேத்து ஒரு சிறுவனைக் காப்பாத்திட்டேன்னு இறுமாப்பா இருந்தேன். அந்த உணர்வு மறந்து போறதுக்குள்ள, சிங்கப்பூர் பள்ளிச் சிறுவர்கள் மலையில் மாட்டிக்கொண்டு இறந்துள்ள செய்தி வந்திருச்சு."

"வாழ்றது ஒரு தடவை. அதுவும் எத்தனை நாளைக்குன்னு தெரியாது. வேலையும் உடல் நலமும் நல்லா இருக்கு. குடும்பத்துடன் ஒன்னா இருந்தா, அது பெரிய பலம். உனக்காக இல்லைன்னாலும், எங்களுக்காக சேர்ந்து வாழ ஒரு சின்ன முயற்சி செய்யலாமே"

Tamil Short Story - Honourable Mention

கிருத்திகா (Kiruthika)

வேற்றுக் கிரகவாசிகள் (Aliens from different planets)

ஆதி மீண்டும் மீண்டும் நதியாவின் குடும்ப வாழ்க்கையில் அக்கறை கொண்டு பேசுவது அவனுடைய அன்பை வெளிப்படுத்தினாலும், விடைகள் இல்லாத ஒன்றை தொடர்ந்து அவன் பேசுவது ஏனோ?

வெற்றுப் பார்வை பார்த்த நதியா பதில் சொல்லவில்லை.

அவளின் நெற்றிக்கோட்டில் சிந்தனை முடிச்சுகள் விழுந்தன. அது எப்படிப்பட்ட முடிவைத் தேடும் என்று ஆதிக்கு தெரியவில்லை.

அது நன்மையாக அமையும் என்று அவளுடைய உயிர்த் தோழி அதிரா நம்ப ஆரம்பித்தாள்.

யோசனையுடன் அலுவலகம் நோக்கி நடந்த நதியாவிற்கு குழப்பம் பன்மடங்காகப் பெருகியது.

"இனி எப்படிச் சேர்வது?

சேர்வது எப்படிச் சாத்தியம்?

சாத்தியமில்லை என்றுதானே பிரிந்தேன்?

பிரிந்தவர் ஒன்று கூடினால், அன்பு நிலைக்குமா?

நிலைக்காவிடில், அதைத் தாங்கும் சக்தி தனக்குண்டா?

தனக்குண்டு என்றாலும், அவன் நம்புவானா?

நம்பி மீண்டும் சேர்ந்து, என்ன சாதிக்கப்போகிறோம்?"

தெளிவாக தான் எடுத்த முடிவின் மீது நதியாவிற்கு சில சமயங்களில் இப்படித் தடுமாற்றம் ஏற்படுவதுண்டு.

****************************

கடந்த காலம் கனவாகவும் எதிர்காலம் கேள்விக்குறியாகவும் இருப்பது எதனால்? நிகழ்காலம் மட்டும் உயிரோட்டத்தை இழந்து இருப்பதும் ஏனோ?

அன்று செய்தித்தாள், தொலைக்காட்சி என எங்கு பார்த்தாலும், நாசாவின் அறிவியல் ஆராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பு தான் பேச்சாக இருந்தது.

பல காலமாக சொல்லப்பட்டு வரும் அனுமானம் என்னவெனில், டைனோசர்கள்தான் பூமியின் சொந்தக்காரர்கள், மனிதன் வேற்றுக் கிரகத்திலிருந்து ஆராய்ச்சிக்காக பூமிக்கு வந்த இனம் என்பதுதான். விருந்தினர்களாக வந்தவர்கள் இங்கேயே தங்கி விட்டனர் என்றும் அதற்கான ஆதாரங்களைத் திரட்ட பல்வேறு நாடுகள் முயற்சி செய்து வருகின்றனர்.

தங்களுடைய விண்கலத்தை மற்ற கிரகங்களுக்கு அனுப்பிய நாசா அவை எடுத்துள்ள புகைப்படங்களைத் தொகுத்து வெளியிட்டுள்ளது. அவற்றை தொலைக்காட்சி நிலையங்கள் மீண்டும் மீண்டும் ஒளிபரப்ப உலகமே பரபரப்பில் மூழ்கியது.

செவ்வாய் கிரகத்தில் எடுத்த புகைப்படத்தில் ஆண்களைப் போலத் தோற்றம் கொண்டுள்ள பெரிய அரக்கர்கள் உள்ளனர். சிறுவர்கள், பெரியவர்கள் என்றில்லாமல் எல்லா உருவமும் ஒரே அளவில் உள்ளன.

கிருத்திகா (Kiruthika)

# வேற்றுக் கிரகவாசிகள் (Aliens from different planets)

வீனஸ் கிரகத்தில் எடுத்த புகைப்படங்களில் குள்ள உருவம் கொண்ட பெண் உருவங்கள் காட்சியளித்தன. அவர்கள் சிரிப்பது போலவும், கூட்டாகச் சேர்ந்து உண்பது போலவும் புகைப்படங்கள் இருந்தன.

மற்ற கிரகங்களிலும் விநோதமான உருவங்கள் தெரிந்தன.

தங்களுடைய ஆராய்ச்சியின் பலனாக நாசா ஒரு கோட்பாடு சொல்கிறது.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வேற்றுக் கிரகவாசிகள், பூமியைச் சோதனைக்குத் தேர்ந்தெடுத்ததாகவும், செவ்வாய் மற்றும் வீனஸ் கிரகத்தில் இருந்து வாழ வந்த இரு வேறு இனங்கள் பூமிக்கு ஏற்பத் தங்களை மாற்றிக்கொண்டதாகவும் அந்தக் கோட்பாடு சொல்லியது.

அரக்க உருவிலோ குள்ள உருவிலோ இல்லாமல், ஆண்களும் பெண்களும் கிட்டத்தட்ட ஒரே உயரம் கொண்டவர்களாக பூமியில் உருவெடுத்து ஒருவருக்கொருவர் சேர்ந்து வாழத் தொடங்கிவிட்டனர்.

மற்ற கிரகவாசிகளால் இவர்களிடம் போட்டியிட முடியாமல் திரும்பிவிட்டதாகவும் அது சொன்னது. ஆணாகவும் பெண்ணாகவும் வாழ்ந்து வரும் நாமெல்லாம் இரண்டு வேறு கிரகத்தில் வசித்து வந்தவர்கள் என்றும் அந்த கோட்பாடு திட்டவட்டமாக ஆதாரபூர்வமாகச் சொல்லியது.

பூமியில் காலங்காலமாக வாழ்ந்து வந்தாலும், ஆணும் பெண்ணும் ஒத்து வாழ முடியாமல் எத்தனை எத்தனை நகைச்சுவைகள் சொல்லப்படுகின்றன. இப்பொழுது விஞ்ஞானப்பூர்வமாக ஆணும் பெண்ணும் வெவ்வேறு கிரகத்தின் பிரதிநிதிகள் என்று தெரிய வருகிறது. நம்முடைய உணர்வுகளையும் செய்கைகளையும் பார்த்தாலே அது தெள்ளத் தெளிவாகத் தெரிந்துவிடும். மேலும், இந்தக் கோட்பாடு…

திடுக்கிட்டு படுக்கையிலிருந்து எழுந்த நதியாவிற்கு உடல் வியர்த்திருந்தது. மூச்சு விடமுடியவில்லை. சில நொடிகள் 'நான் இந்த பூமிக்கு சொந்தமில்லையா. என் தாய்நாடு என்னுடையது அல்லவா? நான் வீனஸ் கிரகத்திலிருந்து வந்திருப்பேனா?" என்ற குழப்பம் நதியாவிற்கு ஏற்பட்டது.

உண்மை எப்படி இருந்தாலும், கனவு விநோதமானது என்றாலும் தன்னால் மட்டும் அல்ல, எந்தப் பெண்ணாலும் தன் இயல்பு மாறாமல் கணவனுடன் வாழ முடியாது என்ற தெளிவு பிறந்தது.

இந்த பூமியில் மனித இனம் ஏற்படுத்தி உள்ள நாகரீக சமூகத்தின் ஆதிக்கத்தில் குழம்பி பாதிக்கப்பட்டுள்ள மனிதர்களை எண்ணி வேதனைப் பட்டாள் நதியா.

படுக்கைக்கு அருகில் மேசையின் மேல் காற்றில் படபடத்துக் கொண்டிருந்த விவாகரத்துக்கான விண்ணப்பத் தாளை எடுத்துப் பார்த்தாள். பூர்த்தி செய்யப்பட்டு கையெழுத்திடாமல் வைத்திருந்த விண்ணப்பம் அவளிடம் பல பல கேள்விகளை எழுப்பியது.

விடிந்து கொண்டிருந்த சூரியன் அதிகாலையிலேயே சாளரம் வழியாக அக்கினிப்பிழம்பாக அவளைச் சுட்டெரிக்க ஆரம்பித்தான்.

***************************

ஆஸ்திரேலியாவிற்குச் சென்ற பிறகு, தினசரி தொடர்பில் இல்லாமல் போன ஜெஸிகா என்ற தோழி, ஒரு வேலையாக சிங்கப்பூர் வந்திருக்கிறாள். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு வந்திருக்கும் ஜெஸிகாவை வரவேற்க நதியா தன்னுடைய வீட்டில் ஒரு சின்ன விருந்திற்கு ஏற்பாடு செய்திருந்தாள்.

கிருத்திகா (Kiruthika)

வேற்றுக் கிரகவாசிகள் (Aliens from different planets)

அவர்களுடைய பள்ளித் தோழிகள் குடும்பத்துடன் ஒன்று சேரும் ஓர் இனிய மாலைப் பொழுது.

வனிதா, கண்ணன், அதிரா, ஆதி, நரேன் என நண்பர்கள் ஒன்று சேர்ந்து அரட்டை அடிக்க, அந்த இடமே களை கட்டியது. எல்லோரும் நீச்சல் குளத்தின் அருகே உள்ள 'விருந்து மண்டபத்தில்' பேசிக்கொண்டிருந்தனர்.

இனிப்பு வகையை குளிர்பதனப்பெட்டியில் இருந்து எடுத்து வர 16-ஆவது மாடியில் உள்ள வீட்டிற்கு சென்ற நதியாவுடன் ஜெஸிகாவும் அதிராவும் உடன் சென்றனர். இனிப்பை அலங்கரிக்க வேண்டும் என்றாள் நதியா. அது தயாராகும் வரை, பால்கனியில் அமர்ந்து மற்ற இரு தோழிகளும் அளவளாவிக் கொண்டிருந்தனர்.

”அதிரா, நதியாவோட திருமண வாழ்க்கையில நிறைய சிரமங்கள் ஏற்பட்டதாக ஒரு முறை அவளே சொன்னா. விவாகரத்துக்கு முயற்சிப்பதாகவும் சொன்னா.”

ஆமாம் என்று தலையாட்டிய அதிரா ஒன்றும் பேசாமல் ஜெஸிகாவையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

”அதுக்கு மேல எனக்கு ஒன்னும் தெரியலை. ரொம்ப நாளாச்சு. இப்ப அந்த பிரச்சினை எல்லாம் முடிஞ்சிருக்கும். எப்படி அவகிட்ட கேக்கறதுன்னு தெரியலை. எதிர் வீட்டில இருக்கிற நரேன் நல்லவனாத் தெரியறான். நதி மேலேயும் அவனுக்கு ஈடுபாடு இருக்குன்னு அவனோட கண்ணிலேயே தெரியுது. நதியா ஏன் நரேனைக் கல்யாணம் செஞ்சிக்கக்கூடாது?” என்று தன்னுடைய அக்கறையை அதிராவிடம் வெளிப்படுத்தினாள் ஜெஸிகா.

கையில் ஒரு தட்டில் கோப்பைகளில் பச்சைத் தேநீருடன் நதியா வர ஜெஸிகா தொடர்ந்து என்ன பேசுவது என்று தடுமாறினாள்.

”தயங்காதே! நதியாவிற்கு மனோதைரியம் அதிகம். அவளிடமே பேசலாம்.” என்றாள் நதியாவின் இன்னுயிர் தோழி அதிரா.

”என்ன ஜெஸிகா? என் வாழ்க்கையில ஓர் வெற்றிடம் இருக்குன்னு கவலைப்படறியா?” புன்சிரிப்புடன் கேட்டாள் நதியா.

மையிட்ட ஜெஸிகாவின் விழிகள் இரத்தச் சிவப்பாயின. கண்ணீர் திரையிட நதியாவின் உருவம் கலங்கியது. காதில் விழுந்த குரலில் நதியாவின் தெளிவு அவளுக்குத் தெரிந்தது.

”எனக்குப் பிடிச்சவனைத் தான் கல்யாணம் செஞ்சேன். அப்போ அவனுக்கும் நான்தான் உயிர். கல்யாணத்துக்கு அப்புறம் தான் விசயம் புரிஞ்சுது. வீட்டிற்குள் நுழைந்தவுடன் காதல் மாயம் மறைவதை நான் உணர்ந்தேன். வீட்டை எப்படி அழகாக வைச்சுக்கனும் என்கிறதுல இருந்து, பல இரசனைகள் என்னுடையதை விட அவனுடையது ரொம்ப வித்தியாசமா இருந்தது. ஒரே வீட்டுக்குள்ள வாழும்போது ஒருத்தரோட விருப்பத்தை மற்றவரால ஏத்துக்க முடியலை.

நாள் முழுக்க ஊருக்கு ஏத்தமாதிரி வாழ வேண்டியவங்கதான நாம எல்லாரும். அப்ப, ஒவ்வொத்தரும் தன் வீட்டில் மட்டுமாவது தானாக இருக்க விரும்பறான். தனக்குப் பிடித்ததை செய்ய விழைகிறான். அப்போ இடறபாடுகள் ஏற்படுது.

கிருத்திகா (Kiruthika)

வேற்றுக் கிரகவாசிகள் (Aliens from different planets)

ஒரே வீட்டில இருந்தாலும், ஒருத்தருக்கு துணை தேவைப்படும்போது இன்னொருத்தர் ஓய்வாக கிடைக்கவில்லை. அதுதான் நிதர்சனம். அவனுக்கு நான் வேண்டப்பட்ட தருணங்கள்ல, அவனிடம் என்னால ஈடுபாடு செலுத்த முடியலை. அதற்குப் பதிலா, நான் நேசித்த புத்தகங்களை நாடிப் போனேன். எனக்கு அவன் தேவைப்பட்ட தருணங்களில் அவனுடைய நேரம் எனக்குக் கிடைக்கலை. அவன் வேலையில் மூழ்கியிருந்தான். இப்படி எத்தனையோ வேறுபாடுகள். இடைவெளிகள்.

எங்களால ஒன்றாக வாழத்தான் ஆசை. முடியலை. ஒரே கூரையில் இரண்டு இரசனைகள் சாத்தியப்படாதுன்னு தோணுச்சு. பிரிஞ்சுட்டோம்."

அவளுடைய கைகளைப் பிடித்துக்கொண்டாள் ஜெஸிகா. சிறிது நேரம் அமைதி அவர்களை அடைகாத்தது.

குழம்பிய ஜெஸிகா, "என்னடி செய்தாய்?" எங்கே அவன் இப்போ?"

அப்பொழுது அங்கு வந்து சேர்ந்த வனிதா, "எங்கே போனானா? எதிரில் உள்ள வீட்டிற்குத்தான்" என்று கண்ணடித்துக்கொண்டே சொன்னாள்.

ஜெஸிகாவின் கண்கள் வியப்பில் விரிந்தன.

"யார் நரேனா? அவனா உன்னுடைய கணவன்? கல்யாணப் பத்திரிக்கையில் பார்த்த பெயர்..." என்று குழம்பிய ஜெஸிகாவை நோக்கித் தலையாட்டிய நதியா, "நரசிம்மன் என்கிற நரேன்" என்று சொன்னாள்.

"விவாகரத்தைத் தவிர வேறு வழியில்லை என்று நினைக்கும் அளவிற்கு போனபொழுது, நாங்கள் மீண்டும் பேசக்கூட வாய்ப்பில்லைன்னுதான் நானும் நினைச்சேன்.

பிரச்சினையைக் களைந்துவிட்டால், எதையும் இழக்கத் தேவையில்லை என்று ஒருநாள் எனக்குப் புரிஞ்சுது. அவனுடன் உட்கார்ந்து பேசினேன்.

விவாகரத்து வேண்டாம் என்று முடிவு செய்தோம். ஆளுக்கு ஒரு வீட்டில் இருக்க முடிவு செய்தோம்."

நதியாவை அணைத்துக்கொண்ட ஜெஸிகா, அவள் அறியாத வண்ணம் அவளின் தோளுக்குப் பின்னால் தன் கண்களைத் துடைத்து பார்வையைத் தெளிவாக்கிக்கொண்டாள்.

"எப்படி நதி உன்னால் மட்டும் இப்படி யோசிக்க முடியுது? எதிர் எதிர் வீட்டில எப்படி?"

"அவனுடைய வீடு அவனிஷ்டம். என்னுடைய வீடு எனக்கு சொர்க்கம். அன்பு எனும் பாலம் எங்களிடையே முன்னைவிட இப்போ பலமா இருக்கு."

நதியாவிற்கு ஆறுதல் தேவையிருக்கவில்லை. தோழிக்கு அவள் தெம்பூட்டினாள்.

"ஞாபகம் இருக்கா? நாம படிக்கிற காலத்தில வருங்கால கணவனைப் பற்றி பேசினோம். சாதிக்க வேண்டிய கனவுகளைப் பற்றி பேசினோம். அப்பொழுது எனக்கு நரேனைத் தெரியாது. மருத்துவம் தெரியாது.

நரேன் என்னைக் கல்யாணம் செய்வான் என்று அப்போ யோசிச்சேனா?

கல்யாணம் செய்த பிறகு அவனிடம் எனக்கு வேறுபாடுகள் ஏற்படும் என்று எள்ளளவும் சிந்திக்கவில்லை.

என்னனென்னமோ நடந்துவிட்டது."

"நதியா விவாகரத்து செய்யவில்லை. தங்களுடைய தனி சுதந்திரத்தில் தலையிடாத வண்ணம் எதிரெதிரே உள்ள வீட்டில் வாழ்கின்றனர். வார இறுதியில் ஒன்றாக வெளியில் செல்கின்றனர். சில மாலை வேளைகளில் ஒன்றாக ஏதாவது ஒரு வீட்டில் கழிக்கின்றனர்." என்று வனிதா மேலும் சொல்லி நிலைமையை விளக்கினாள்.

"தனக்குப் பிடித்த இடத்தில் அமர்ந்து நரேன் வரைகிறான். எந்த சட்ட திட்டமும் அவனுக்கு இல்லை. நம்ம நதியா நேரா நேரத்திற்கு தூங்கி தன் வழியில் திட்டமிட்ட வாழ்க்கை வாழ்கிறாள். அவரவர் தேவைகளை அவரவரே பார்த்துக் கொள்கின்றனர். இருவருக்கும் இடையே அன்பு கூடியுள்ளது. பிரச்சினைக்கு வாய்ப்புகளே இல்லை" என்று அதிரா சொல்வதைக் கேட்டு ஜெஸிகாவின் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன.

காலியான தேநீர்க் கோப்பையைக் கீழே வைத்தனர் தோழிகள்.

அவர்கள் அமர்ந்திருந்த பால்கனியில் இருந்து கீழே விருந்தினர்கள் கூட்டம் தெரிந்தது. நரேன் சிரித்துக்கொண்டே அனைவரிடமும் பேசிக்கொண்டிருப்பது ஜெஸிகாவின் கண்களுக்குத் தெரிந்தது. நதியாவைப் போலவே, அவனுடைய முகத்திலும் வருத்தமேயில்லை. மகிழ்ச்சி கரை புரண்டோடியது.

"எத்தனைக் காலத்திற்கு தனித்திருக்கப்போகிறாய்?" என்று வாய்ப்பு கிடைத்ததால், தன் நெடுநாள் தவிப்பை வெளியிட்டாள் அதிரா.

அலங்கரிக்கப்பட்ட இனிப்பை நதியா எடுத்து வர, வனிதா அதை வாங்கிக்கொண்டு மின் தூக்கியை நோக்கி நடந்தாள். ஜெஸிகா அவளைப் பின்தொடர்ந்தாள். வீட்டைப் பூட்டிக் கொண்டே நதியா அதிராவிற்கு பதில் கூறினாள். அவளுடைய இரும்பு நெஞ்சமும் புதுமையை புகுத்தும் தைரியமும் தெளிவாகத் தெரிந்தன.

"இன்னைக்கு எதிர் எதிர் வீட்டில் இருப்போம் என்று அன்னைக்குத் தெரிஞ்சுதா? இல்லையே!. நாளை என்ன நடக்கும் என்றும் இப்போ தெரியாது. எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்.

அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரியாத சவால் தானே வாழ்க்கை.

இந்த உலகில் எல்லாமே மாறுகிறது, என்னைக் கேட்காமலே... இதுவும் மாறலாம்... நாங்கள் இப்படியே தனித்தனியாகவும் இருக்கலாம். சேர்ந்தும் இருக்கலாம். ஆனால், பிரிவு என்பது இனிமேல் இல்லை என்று என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும். அன்பு எக்காலத்திலும் குறையாது என்பது திண்ணம்.

ஒரே அறை.

ஒரே வீடு, வேறு அறைகள்.

ஒரே குடியிருப்பு. வெவ்வேறு வீடுகள்.

ஒரே வட்டாரம். வேறு குடியிருப்பு.

ஒரே நாடு. வேறு வட்டாரம்.

சுவர்கள் மனங்களை பிரிக்கும் என்றா நினைக்கிறாய்?”

மாலை நேரச் சூரியனின் கதிர்களால் கீழ்வானம் செக்கச் செவேலென பிரகாசித்துக் கொண்டிருந்தது.

வார்த்தைகள்: 3339